©
தமிழ்நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 48] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 17, 2014
மார்கழி 2, ஜய, திருவள்ளுவர் ஆண்டு – 2045

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (2D) எண் 631, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (H1)த் துறை, 11 டிசம்பர் 2013.]*

1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) 35 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1975 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்குதலும்) விதிகளில் வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் திருத்தங்களின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 35 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,–

(1) விதி 81–A இல் ''படிவம் 26 (இரு படிகளில்),'' என்ற தொடருக்குப் பதிலாக ''படிவம் 30 (இரு படிகளில்),'' என்ற தொடரினை அமைத்துக் கொள்ளவேண்டும்.

(2) விதி 81–A இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவம் 26 நீக்கப்பட வேண்டும்;

(3) படிவம் 29–க்குப் பிறகு, பின்வரும் படிவம் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

"படிவம் 30

(81-A ஆம் விதியைக் காண்க)

**——— இல் முடியும் அரையாண்டுக்கான தகவல் தொழில்நுட்ப மென்பொருள் நிறுவனங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருள் மேற்கொள்ளும் சேவைப்பணிகள் தற்சான்றளித்தல்**

**1.** தகவல் தொழில்நுட்ப நிறுவனம் அல்லது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைப்பணிகளின் முதன்மை வேலையளிப்பவரின் பெயர் மற்றும் முகவரி :

**2.** ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒப்பந்ததாரர்களின் எண்ணிக்கை :

(a) ஒப்பந்ததாரரின் பெயர் :

(b) முகவரி :

(3) பணிக்கமர்த்தப்பட்டுள்ள ஒப்பந்தத் தொழிலாளர் எண்ணிக்கை :

(4) ஒப்பந்தத் தொழிலாளர் அமர்த்தப்பட்டுள்ள பணியின் தன்மை :

(5) மேற்சொன்ன சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் பதிவுச் சான்றிதழ் பெறப்பட்டுள்ளதா?

(6) ஒப்பந்ததாரர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 12ஆம் பிரிவின் கீழான செல்திறனுள்ள உரிமம் பெற்றுள்ளதோடு, நாளது தேதி வரையில் புதுப்பிக்கப்பட்டுள்ளதா?

(7) ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின் V ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நல்வாழ்வு மற்றும் சுகாதார வசதிகள் அளிக்கப்படுகின்றனவா?

(8) விதிகள் 74, 75, மற்றும் 78—இன்படி பராமரிக்கப்படவேண்டிய பதிவேடுகள் முதன்மை வேலையளிப்பவர் / ஒப்பந்ததாரர்களால் பராமரிக்கப்படுகின்றனவா?

(9) விதி 82—இல் குறிப்பிட்டுள்ள அறிக்கைகள் முதன்மை வேலையளிப்பவர் / ஒப்பந்ததாரர்களால் அனுப்பப்படுகின்றனவா?

*முதன்மை வேலையளிப்பவரின் கையொப்பம்.*

**சான்று**

——— முடியும் அரையாண்டில் 1970 ஆம் ஆண்டு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 37/1970) படியான கடப்பாடுகள் மற்றும் அவற்றில் குறிப்பிட்டுள்ளதோடுங்கூட 1975 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்தலும் நீக்கலும்) விதிகளிலுள்ளவாறும், நாங்கள் நிறைவேற்றியுள்ளோமெனச் சான்றளிக்கப்படுகிறது.

சட்ட விதிகளை முழுவதுமாக அறிந்து, மேற்சொன்ன சான்று அளிக்கப்படுகிறது. மேலே அளிக்கப்பட்டுள்ள யாதொரு தகவல் தவறானதெனப் பிற்காலத்தில் தெரியவந்தால், அதற்கு நாங்கள் கூட்டாகவும் கண்டிப்பாகவும் பொறுப்பு என்பதோடு, மேற்சொன்ன சட்டம் மற்றும் மேற்சொன்ன விதிகளின் கீழ் குற்றவழக்கு தொடரப்படுவதற்குரியவர்களாவோம்.

| | | |
|---|---|---|
| *மேலாளரின் கையொப்பம்* | : | *முதன்மை வேலையளிப்பவரின் கையொப்பம்* |
| பெயர் : | : | பெயர் : |
| பதவிப்பெயர் : | : | பதவிப்பெயர் : |
| அலுவலக முத்திரை : | : | அலுவலக முத்திரை : |
| நாள் : | : | நாள் : |

ஏற்கப்பட்டது

தொழிலாளர் நல ஆய்வாளர்

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.